# கர்த்தரின் பந்தி

## கர்த்தரின் பந்தியின் போது கர்த்தரின் பிரசன்னத்தை விசுவாசிகள் அனுபவிக்கின்றனர்

சிறுவர்களுக்கு போதிப்பவர்கள் பாடம் L3b யைப் படிக்கவும்.


*குழு ஆராதனையைத் திட்டமிட்டு வழிநடத்துபவர்களுக்கான வழிகாட்டுதல்கள்* (அறிமுகப் பாடம் #a0e) என்ற பாடத்தை இன்னும் நீங்கள் வாசிக்கவில்லை என்றால் இப்போது அதை வாசிக்கவும்.

**ஜெபம்:** "கர்த்தராகிய இயேசுவே, நானும் எனது மந்தையும் சேர்ந்து உமது நினைவாக பானத்தையும் அப்பத்தையும் பகிர்ந்துகொள்ளும் போது உமது மன்னிக்கும் கிருபையையும், ஜீவனளிக்கும் ஆவியையும் பெற்று அனுபவிக்க அருள் புரிவீராக."


1. **உங்களது மந்தையைக் கர்த்தரின் பந்திக்குள் வழிகாட்ட உங்கள் இருதயத்தையும் மனதையும் தேவ வார்த்தையால் ஆயத்தம் செய்யுங்கள்.**

கர்த்தரின் பந்தி, நற்கருணை ஆராதனை, ஐக்கிய விருந்து, கடைசிப் பந்தி (Eucharist) என்றெல்லாம் அழைக்கப்படும் இது கடந்த இருபது நூற்றாண்டுகளாக கிறிஸ்தவ ஆராதனையின் மையமாக இருந்து வருகிறது.

**பின்னணி**



- அப்பமும் பானமும் கிறிஸ்துவின் பௌதீக உடலும் இரத்தமும் என்று கூறி சில சபைகள் தவறிழைத்தன.
- பிற சபைகள் அப்பமும் பானமும் நினைவுச் சின்னங்களே தவிர நமக்கு சம்பந்தமில்லாதவை என்று கூறி தவறு செய்தன.
- பின் வரும் வேத வசனங்களை வாசிக்கும் போது, அதைப் பற்றி தேவ வார்த்தை என்ன சொல்லுகிறது என்று நீங்கள் அறிந்து கொள்ளலாம்.



**யாத்திராகமம் 12:21-28** ல் காண்க:

- எகிப்தில் வாழ்த்த எந்த மக்களுக்கு 'பஸ்காவின்' பலியை ஆயத்தம் செய்ய கட்டளை தரப்பட்டது?
- பலியின் இரத்தத்தை அவர்கள் என்ன செய்தனர்?
- பஸ்காவின் பலியை ஆசரித்தவர்களுக்குக் கர்த்தர் என்ன செய்வார்?

**யாத்திராகமம் 16:2-5** ல் காண்க:

- ஒரு நீண்ட பயணமாக மோசேயைப் பின்பற்றி சென்ற போது இஸ்ரவேல் மக்கள் எதைப்பற்றி கவலைப்பட்டார்கள்?
- மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய தேவன் எதைக் கொடுத்தார்?
- தேவன் தங்களுக்கு இலவசமாக அளித்த அப்பத்தை மக்கள் எவ்வாறு அழைத்தனர்? (யாத். 16:30-31).

**மாற்கு 8:1-9** ல் காண்க:

- தமது போதனையைக் கேட்ட மக்களைப் பற்றி இயேசு எவ்வாறு உணர்ந்தார்?
- இயேசுவின் பிரசங்கத்தை மக்கள் கேட்டுக் கொண்டிருந்த இடம் எப்படிப்பட்டது? (4)
- மக்களின் தேவையைப் பூர்த்தி செய்ய இயேசு கொடுத்தது என்ன?

யோவான் 6:25-36 ல் காண்க:

- தேவன் அதிசய மன்னாவை இஸ்ரவேலருக்குக் கொடுத்தபோது இஸ்ரவேலரின் தலைவனாகிய மோசேயை எந்த விதத்தில் இயேசு ஒத்தவராய் இருக்கிறார்.
- இயேசு மோசேயை விட எந்த விதத்தில் பெரியவர்?

யோவான் 6:48-51 ல் காண்க:

- தம்மை நம்புகிற யாவருக்கும் என்ன கொடுப்பதாக இயேசு வாக்கருளினார்.

யோவான் 6:52-64 ல் காண்க:

- தம்மைப் “புசித்து” “பானம் பண்ணுகிறவர்களுக்கு” வேறு என்ன கொடுப்பதாக இயேசு வாக்குத்தத்தம் செய்தார்?
- எவ்வாறு மக்கள் இயேசுவை “புசித்து பானம் பண்ண” முடியும்? (வச. 63 & 64).

மத்தேயு 26:26-29 ல் காண்க:

- யூதரின் பஸ்கா விருந்தை இயேசுவும் அவரது சீஷர்களும் அருந்திக் கொண்டு இருந்தபோது என்ன நடந்தது?
- பஸ்காவின் அப்பத்தை இயேசு என்னவென்று கூறினார்?
- பஸ்காவின் பானத்தை இயேசு எப்படி அழைத்தார்?
- தமது சீஷர்கள் என்ன செய்ய வேண்டும் என்று இயேசு கட்டளை இட்டார்?

1 கொரி. 10:16-22 ல் காண்க:

- ஐக்கிய விருந்தின் பாத்திரத்தில் இருந்து விசுவாசிகள் பருகும் போது என்ன நடக்கிறது? (16)
- ஐக்கிய விருந்தின் அப்பத்தை விசுவாசிகள் புசிக்கும்போது என்ன நடக்கிறது?
- புறஜாதியாரின் பலியைப் புசிக்கும் விசுவாசிகளுக்கு காத்திருக்கும் அபாயம் என்ன?

1 கொரி 11:25-34 ல் காண்க:

- கர்த்தரின் பந்தியில் பங்கு கொள்வது என்பது எவ்வாறு ஒரு முக்கியமான செய்தியை தெரிவிப்பது ஆகும்? (26).
- கர்த்தரின் பந்தியை எடுக்கு முன்னர் விசுவாசிகள் என்ன செய்ய வேண்டும்? (27 & 28).
- பிற விசுவாசிகளிடம் அன்பு கூராமல் கர்த்தரின் பந்தியை எடுப்பவர்களுக்கு என்ன அபாயம் காத்திருக்கிறது.

2. **வரும் வாரத்துக்கான செயல்பாடுகளை உடன் ஊழியர்களுடன் திட்டமிடவும்.**

முறையாக நடக்கும் ஆராதனைக் கூட்டங்களுக்கு வரமுடியாமல் நோயுற்றும் பலவீனமாகவும் இருப்பவர்களுக்கு கர்த்தரின் பந்தியை கண்காணிகள் (decons) எடுத்துச் செல்ல ஏற்பாடு செய்யவும்.

கர்த்தரின் பந்தியின் விசேஷத்தை அறியாதவர்களாய்க் காணப்படும் விசுவாசிகளிடம் கலந்துரையாடி கிறிஸ்துவின் சரீரம் மற்றும் இரத்தத்தின் இரகசியத்தின் மேல் மதிப்பு வைக்க வேண்டிய தேவையை உணர்த்தவும்.

இயேசுவும் பவுலும் கொடுத்த அதே முக்கியத்துவத்தை கர்த்தரின் பந்தியை பரிமாறும் உடன் ஊழியர்களும் கொடுக்கும்படி அவர்களோடு கலந்து உரையாடவும்.

கர்த்தரின் பந்தியின் போது, விசுவாசிகள் கிறிஸ்துவின் பிரசன்னத்தை உணர, பந்தியை பரிமாறுபவர்கள் அவர்களுக்கு உதவி செய்யும் வழிவகைகளைக் காண உடன் ஊழியர்களுடன் கலந்து பேசவும்.

சபைத் தலைவர்களும், குடும்பத் தலைவர்களும் கர்த்தரின் பந்தியைப் பரிமாறும் போது அதைப்பற்றி விளக்கம் அளிக்கும்படி அல்லது மாறி விளக்கம் அளிக்காத படி பயிற்சி தர திட்டம் இட வேண்டும். (பரிசுத்த ஆவியானவர் விசுவாசிகளின் உள்ளத்தில் கிரியை செய்கிற படியால் அப்பமும் பானமுமே பேச வேண்டியதைப் பேச அனுமதிக்க வேண்டும்).

## 3. வரும் ஆராதனை வேளைக்காக உடன் ஊழியர்களுடன் திட்டமிடுக.


**பிள்ளைகள்** தாங்கள் தயாரித்த நாடகம், கவிதை அல்லது கேள்விகளை வழங்கட்டும்.

பகுதி 1 ல் நீங்கள் கண்ட எதை வேண்டுமானாலும் **கூறலாம்** அல்லது நடித்துக் காட்டலாம். நீங்கள் அறிந்ததைக் குறித்து கேள்விகள் **கேட்கவும்.**

- யூதர்களின் பஸ்கா, யாத் 12:21-28.
- வானத்தில் இருந்து வந்த அப்பம், யாத். 16:2-5 & 30-31.
- இயேசு 4000 பேரை போஷித்தல், மாற்கு 8:1-9.
- இயேசு தமது சரீரத்தைப் புசிக்கும்படியாக மக்களிடம் கூறுதல். விசுவாசிகளுக்கு என்ன வாக்குத்தத்தம் செய்தார். யோவான் 6:25-36 & 48-64.
- இயேசு கர்த்தரின் பந்தியாகிய ஆசரிப்பை ஏற்படுத்துதல், மத். 26:26-29.
- கர்த்தரின் பந்தியில் புசிப்பதும் குடிப்பதும் என்பதின் உண்மையான அர்த்தம் என்ன, 1 கொரி 10:16-22.
- கர்த்தரின் பந்தியில் பங்கு பெறுமுன் நாம் ஏன் நமது பாவங்களை அறிக்கை இடுகிறோம், 1 கொரி. 11:25-34.

**நன்றாகப் பாடக் கூடியவர்** யாராவது இயேசுவின் சிலுவையைப் பற்றிய பாடல் இருந்தால் பிறருக்குப் பாடி கற்றுக் கொடுக்கவும். சத்தமாகப் பாடுவது (உங்கள் பகுதியில்) ஆபத்தாக இருந்தால் மெதுவாகப் பாடவும்.

ஆதி. 4:4-4 ல் உள்ள குற்றமற்ற மிருகத்தை பலியாக தேவனுக்கு அளித்த ஆபேலின் கதையை வாசித்து **கர்த்தரின் பந்தியை** அறிமுகம் செய்யவும். இயேசுவே குற்றமற்ற பலி, அவர் நம்மை எவ்வாறு தேவனிடத்தில் கொண்டு வந்தார் என்பதை விளக்கவும். **கர்த்தரின் பந்தியை** எடுக்கு முன் விசுவாசிகள் அமைதியாக தங்கள் பாவங்களை அறிக்கையிட அனுமதிக்கவும். வெளிப்படையான குற்றம் செய்திருந்தால் குழுவிடம் வாய் மூலமாக அறிக்கையிடவும்.



சேர்ந்து **மனப்பாடம்** செய்க : 1 யோவான் 1:7-9.

Copyright 2004 © by Paul-Timothy. May be freely copied. Download from www.Paul-Timothy.net